# இந்த தீபாவளி பண்டிகையை பாதுகாப்பாக கொண்டாடுங்கள்!

***ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம், பட்டாசுகள் பற்றிய பாதுகாப்பு குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களை பகிர்கிறது***

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 21, 2021) – நவம்பர் 4 ஆம் தேதியன்று பட்டாசுகளை உபயோகிக்கும்போது பாதுகாப்பாக இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கு நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது. இந்த நன்னாளில் சமூகத்தில் இருக்கும் பலரும் **பண்டி ச்சோர் திவஸ்** என்னும் நாளையும் கொண்டாடுகிறார்கள்.

குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் திறந்தவெளிகளில் ஒன்றுகூட குடியிருப்புவாசிகள் விரும்பினால், தங்கள் உடல் நலன் மற்றும் பாதுகாப்பினை மனதில் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள். அன்புக்குரியோர்களையும் சமுதாயத்தையும் பாதுகாப்பாக வைத்திருங்கள். நல்ல சுகாதார பழக்கம் மற்றும் சமூக விலகலைக் கடைப்பிடியுங்கள்; உடல் நலமில்லாதிருப்பின் வீட்டிலேயே தங்கிவிடுங்கள்.

**பட்டாசுகளில் இருந்து பாதுகாப்பு**
தனியார் கட்டிடங்களில்  உரிமம் எதுவும் பெறாமலேயே குறுகிய தூரமே சென்று செயல்படும் பட்டாசுகள் கொளுத்த அனுமதிக்கப்படுகின்ற, வருடத்தின் நான்கு நாட்களில், தீபாவளி பண்டிகையும் ஒன்றாகும். உப சட்டத்தின்படி, பட்டாசு கொளுத்துவதற்கு விக்டோரியா தினம், கனடா தினம் மற்றும் புத்தாண்டு தினம் ஆகிய தினங்களிலும் கூட அனுமதிக்கப்படுகிறது.

குறுகிய தூரமே சென்று செயல்படும் பட்டாசுகள் என்பவை, கொளுத்தியவுடன், மூன்று மீட்டருக்கும் (10 அடிக்கும்) குறைவான தூரம் செல்லக்கூடியவையாகும் (உதா., புஸ்வானம், தரைச் சங்கரம், கைச்சக்கரம், மத்தாப்புக்கள்). அதாவது ஏறாத்தாழ ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து ஒன்றின் உயரம் அல்லது கூடைப்பந்து வளையத்தின் உயரம் எனக் கொள்ளலாம்.

மற்ற எந்த ராக்கெட் வகை பட்டாசுகளும் ப்ராம்ப்ட்டன் நகரில் தடை செய்யப்பட்டுள்ளன. வீதிகள், பக்கவாட்டு நடைபாதைகள், நகரின் பூங்காக்கள் உள்ளே, அல்லது நகராட்சி மற்றும் பள்ளி கட்டிடங்களில் பட்டாசுகளை கொளுத்த அனுமதிக்கப்படுவதில்லை.

தனியார் கட்டிடங்களில் குறுகிய தூரமே சென்று செயல்படும் பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்புவாசிகள் பின்வரும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வெண்டும்:

- தீப்பற்றிய பட்டாசுகளை அணைக்க நீர் நிரப்பிய கொள்கலன்கள் அல்லது தண்ணீர் பைப்புகளுடன் இணைக்கப்பட்ட நீண்ட குழாயை பக்கத்தில் வைத்துக் கொள்ளவும்.
- மத்தாப்பு தவிர வேறெந்த ஒரு பட்டாசையும் கையில் பிடிக்கவோ கொளுத்தவோ வேண்டாம்.

- பிறரை நோக்கி பட்டாசுகளை நீட்டவோ அல்லது வீசி எறியவோ வேண்டாம்.
- மத்தாப்புக்களை உபயோகித்த பின்னர் அவற்றை அப்புறப்படுத்தும் முன்பாக, நீர் நிறைந்த ஒரு கொள்கலனில் இட்டு குளிர்ச்சியாக்க வேண்டும்.
- அனைத்து பட்டாசுகளையும் அப்புறப்படுத்தும் முன்பாக, அவற்றை குளிர்ச்சியாக்க வேண்டும்.

நகரின் வலைத்தளத்தில், ப்ராம்ப்ட்டன் நகரில் பட்டாசு  சில்லறை விற்பனை செய்யும் கடைகளின் பட்டியல் கிடைக்கப்பெறுகிறது. உரிமம் பெற்ற சில்லறை விற்பனை கடைகளில் மட்டுமே பட்டாசுகளை வாங்க நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

பட்டாசு பற்றிய பாதுகாப்பு மற்றும் உப சட்டங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும் www.brampton.ca/fireworks.

-30-

**ஊடக தொடர்பு:**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாலர், ஊடகம் &சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நக்ரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca